1987 மே 4]

இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்களை விசாரித்து, அவர்களுடைய மூதாதையர்களைப் பற்றி அறிந்து தான், எத்தனை ஆண்டுகள் அந்தப் பகுதியிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்துதான் சர்டிபிகேட் வழங்க முடியும்.

மானாமதுரை தொகுதி, திருபுவனம் ஊராட்சி ஒன்றியம், ஜாரி புதுக்கோட்டை கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.

585—(*வினா எண் 8926) திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட **வினாக்**களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி—திருபுவனம் ஊராட்சி ஒன்றியம், ஜாரி புதுக்கோட்டை கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நில ஆர்ஜித நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மனைப் பட்டா வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். மானாமதுரை வட்டம் எருக்கலை வெள்ளூர் கிராமம் ஜாரி புதுக்கோட்டை குக்கிராமத்தில் புல எண் 151/1-ல் விஸ்திரணம் 4.13 எக்கர் புஞ்சை சிவகெங்கை (ஆதி திராவிடர் நலம்) தனித் தாசில்தாரின் நடவடிக்கை எண் ந.க. 1663/8, நாள் 9—3—1984 (அவார்டு எண் 9/83). 72 ஆதி திராவிடர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்யப் பட்டது.

(ஆ) 10—7—1984-ல் 68 ஆதி திராவிடர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, நான் கேள்வி போடுகிறபோது பட்டாக்கள் வழங்கப்படவில்லை. இப்போது பட்டா வழங்கப்பட்டிருப்பதால், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழங்கப்பட்டிருக்கிற பட்டா நிலங்களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 'தாட்கோ' மூலமாக விரைவாக ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டா இப்போதுதான் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமை கொடுத்து, ஒவ்வொரு பகுதியாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அங்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படும்.

திரு. க. பாரமலை: தலைவரவர்களே, பட்டா கொடுக்கப்பட்டவுடனே கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கூட இன்னும் வீடு கட்ட ஆரம்பிக்கவில்லை. ஆகவே விரைவில் நிதி ஒதுக்கீடு செய்து, முன்னுரிமை கொடுத்து, வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடலூர், உதகை மலைவாழ் பழங்குடியினருக்குக் குடியிருப்புகள்.

586—(*வினா எண் 12964) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூடலூர், உதகை பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்; 1985-86 ஆம் ஆண்டு மற்றும் 1986-87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் கூடலூர் மற்றும் உதகைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்கு முறையே 60 வீடுகள் மற்றும் 50 வீடுகள் கட்ட வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைவாழ் பழங்குடியினருக்கு 110 வீடுகள் கூடலூரிலும் உதகையிலும் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எந்த எந்த இடத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா? சில ஆதிவாசிகள் காடுகளில் வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடிசைகள் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா? வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில்